**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 405** **நாள்: 28.11.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் வடகிழக்கு பருவ மழை மற்றும் டிட்வா புயல் முன்னேச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

**பொதுமக்கள் புயல் மழை வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

- பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பெருநகர சென்னை மாநகராட்சி வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து செய்து வருகிறது.
- பெரிய ஏரிகள், குளங்கள் மற்றும் பெரிய கால்வாய்கள் ஆகியவற்றை தூர் வாரி சுத்தம் செய்யும் பணிகள் தனித்துவமான இயந்திரங்களான 2 Amphibian, 3 Amphibious Excavator, 6 Robotic Excavator , 3 Mini Amphibians போன்ற இயந்திரங்கள் மூலம் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள 37 நீர் வழி கால்வாய்கள் நவீன இயந்திரங்கள் மூலம் தூர் வாரப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 263 குளங்கள் அதன் கொள்ளவை அதிகரிக்கும் நோக்கத்தோடு புனரமைக்கப்ட்டுள்ளது.
- பெருநகர சென்னை மாநகராட்சியால் 3040 கி.மீ நீளத்திற்கு 11,770 எண்ணிக்கையில் மழைநீர் வடிகால்கள் கட்டமைக்கப்பட்டு மழைக்காலங்களில் சாலைகளில் மழைநீர் தேங்கா வண்ணம் பராமரிக்கப்பட்டு வருகிறது.
- சாலைகளில் தேங்கும் நீரை அகற்றுவதற்காக 170 எண்ணிக்கையில் 100 HP திறன் கொண்ட இயந்திர மோட்டார் பம்புகள் நீர் தேங்கும் இடங்களென கண்டறியப்பட்டு, அவ்விடங்களில் முன்னேற்பாடாக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், டிராக்டர் மீது பொருத்தப்பட்ட இயந்திர மோட்டார் பம்புகள் 550 எண்ணிக்கையில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

- மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றும் வகையில் பல்வேறு திறன் கொண்ட 1496 மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன.
- மழைநீர் வடிகால்களில் மழைநீர் தங்கு தடையின்றி செல்வதை உறுதி செய்ய மழைநீர் வடிகால்கள் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. **நவீன இயந்திரம்** (4000 cubic metre/hour உறிஞ்சும் திறன் கொண்ட இயந்திரம்) மூலமும், ஒப்பங்கள் மூலம் ஒப்பந்த பணியாளர்களை கொண்டும் தூர் வாரப்பட்டுள்ளது.
- சாலைகளில் மழைநீர் தேங்காவண்ணம் மழைநீர் வடிகாலுக்கு செல்ல ஏதுவாக, சுமார் 1,03,000 எண்ணிக்கையில் வண்டல் மண் சேகரிக்கும் தொட்டிகள் அடைப்பின்றி சுத்தம் செய்யும் பணி அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளது.
- சென்னையில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில் மழைநீர் தேக்கமின்றி போக்குவரத்து சீராக இயங்க ஏதுவாக 145 நீர் இறைப்பான்களும், தானியங்கி கண்காணிப்பு கருவிகளும் தயார் நிலையில் உள்ளன
- தாழ்வான இடங்களில் மழைநீரை வெளியேற்ற 39 பம்புகளுடன் கூடிய கீழ்நிலை நீர்தேக்க தொட்டிகள் உள்ள நிலையில் புதிதாக 29 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- 51 எண்ணிக்கையிலான நீர் உறிஞ்சும் லாரிகள் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மூலம் பெறப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும் 30 லாரிகள் ஈடுபடுத்தப்பட உள்ளன,
- சென்னையிலுள்ள 29 ரயில்வே கல்வெர்ட்களிலும் மழைநீர் தங்குதடையின்றி செல்ல நவீன இயந்தரங்கள் மூலம் தூர்வாரப்பட்டுள்ளது.
- பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் விழும் மரங்களை அகற்றுவதற்காக 15 ஹைட்ராலிக் மர அறுவை இயந்திர வாகனங்கள், 2 சக்திமான் ஹைட்ராலிக் ஏணி, 224 கையடக்க மர அறுவை அறுப்பான், 216 டெலஸ்கோபிக் மர அறுவை இயந்திரங்கள் என மொத்தம் 457 மர அறுவை இயந்திரங்கள் தயார் நிலையில் உள்ளன.

- 36 எண்ணிக்கையிலான **படகுகள்** சென்னை மாநகராட்சியால் வாங்கப்பட்டு மண்டலங்களில் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன. கூடுதலாக மீன்வளத் துறையுடன் ஒருங்கிணைந்து, 36 **படகுகள்** வெள்ள மீட்பு (ம) நிவாரண நடவடிக்கைக்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- 215 **நிவாரண மையங்கள்** (சென்னை மாநகராட்சி பள்ளிகள், சமூக மையங்கள், கல்யாண மண்டபங்கள்) செயல்பாட்டுக்கு தயாராகவுள்ளது. மேலும் 111 **சமையல் கூடங்கள்** செயல்பாட்டிற்கு தயார்நிலையில் உள்ளது.
- பொதுமக்களிடமிருந்து புகார்களைப் பெற 1913 புகார் பிரிவு மற்றும் கட்டுப்பாட்டு அறை 24X7 செயல்பட்டு வருகிறது.
- பிளீச்சிங் பவுடர், லைம் பவுடர், பினாயில் ஆகியவை தேவையான அளவு, இருப்பு வைக்கப்பட்டுள்ளது,
- சோழிங்கநல்லூர் மண்டலம் மற்றும் பெருங்குடி மண்டலத்தில் 25 நபர் மற்றும் தண்டையார்பேட்டை மண்டலத்தில் 25 நபர் கொண்ட மாநில பேரிடர் மீட்புக்குழு (SDRF) தயார் நிலையில் உள்ளனர்.
- சென்னையில் 5 எண்ணிக்கையிலான தேசிய பேரிடர் மீட்புக்குழுக்கள் (NDRF) தயார் நிலையில் உள்ளன.
- புயல் மற்றும் மழையின் போது முதியோர் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கும் வகையில் ஆவின் பால் பவுடர் 1 இலட்சம் பாக்கெட்டுகளும், 5 கிலோ அரிசி, 1 கிலோ பருப்பு மற்றும் 1 லிட்டர் பாமாயில் அடங்கிய தொகுப்பு 1 இலட்சம் எண்ணிக்கையில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

**பொதுமக்களுக்கு கீழ்கண்ட வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றிட அறிவுறுத்தப்படுகிறது**

- டிட்வா புயல் மற்றும் கனமழை காரணமாக மீனவர்கள் யாரும் கடலுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறது.
- மேலும் பொதுமக்கள் தேவையின்றி வெளியில் செல்வதை தவிர்த்து பாதுகாப்பாக வீடுகளிலேயே இருக்குமாறும் குறிப்பாக கடற்கரை மற்றும்

பூங்காக்களுக்கு செல்ல வேண்டாமென்றும், மேலும் மரங்களின் கீழ் நிற்க வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

- பொதுமக்கள் பால், குடிநீர், மெழுகுவர்த்தி மற்றும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை முன்கூட்டியே வாங்கி இருப்பில் வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- புயல் மழையின் போது ஆபத்தான இடங்களில் நின்று செல்ஃபி எடுப்பதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
- கைப்பேசி, அவசர கால விளக்குகள் (Emergency Lamps) போதிய அளவில் மின்னேற்றும் (Charging) செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- நாய்கள் உள்ளிட்ட செல்ல பிராணிகளை வெளியில் அழைத்து செல்வதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
- கட்டுமான இடங்களில் கிரேன் போன்ற கனரக இயந்திரங்களை பாதுகாப்பாக நிறுத்தி வைக்க அறிவுறுத்தப்படுகிறது.
- தாழ்வான இடங்களில் வாழும் முதியோர் மற்றும் கர்ப்பிணிகள் பாதுகாப்பான இடத்திற்கு முன்கூட்டியே செல்லுமாறும் தேவை ஏற்படின் சென்னை மாநகராட்சியின் கட்டணமில்லா உதவி மைய எண் 1913 அணுகி சென்னை மாநகராட்சியின் நிவாரண மையங்களில் தங்கலாம் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
- இணைய வழி மற்றும் தொலைத்தொடர்பு சேவை நிறுவனங்கள் ஜெனரேட்டர் இயக்குவதற்கு தேவையான எரிபொருளை போதுமான அளவில் இருப்பில் வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- விளம்பர பதாகைகள் அமைத்திருக்கும் நிறுவனங்கள் பொதுமக்களின் பாதுகாப்பு கருதி ஆபத்தான நிலையில் உள்ள பதாகைகளை உடனடியாக அகற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்

பெருநகர சென்னை மாநகராட்சி.